பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 16 வியாழக்கிழமை (02.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 337

# ஜெனிவா பேச்சின் தோல்வியை அடுத்து மேனனின் கொழும்பு விஜயம் ஒத்திவைப்பு

## அரசுக் குழு ஒன்றை அழைக்கிறது புதுடில்லி அதன் பிறகே வெளியுறவுச் செயலர் வருவார்

புதுடில்லி, நவம்பர் 02

இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலர் சிவ் சங்கர் மேனன் நேற்றுமுதல் இருதினங்கள் இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுகள் பெறுபேறு எதனையும் தராமல் தோல்வியில் முடிவடைந்தது குறித்து புதுடில்லி அரச உயர் மட்டம் ஏமாற்றமடைந்திருக்கிறது. அதனாலேயே வெளியுறவுச் செயலரின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இது தொடர்பில் இந்திய அரசு இன்னமும் அதிகாரபூர்வமாகக் கருத்து எதனையும் வெளிப்படுத்தவில்லை. எனினும், பேச்சுகள் முன் நகர முடியாமற்போனமை தொடர்பில் சில தகவல்களை நேரடியாகப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையிலிருந்து அரசுப் பிரதிநிதிகள் குழு ஒன்றை புதுடில்லி எதிர்பார்த்திருக்கின்றது என்றும் பெரும்பாலும் அந்தக் குழுவினர் இந்தியா சென்று திரும்பிய பின்னரே வெளியுறவுச் செயலர் சிவ் சங்கர் மேனன் கொழும்புக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வார் என்றும் விடயமறிந்த ராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

புதிய வெளியுறவுச் செயலராக சிவ் சங்கர்மேனன் பதவியேற்ற பின்னர் கொழும்புக்கான தனது முதலாவது விஜயத்தை நேற்றைய தினம் ஆரம்பிக்க இருந்தார். ஆனால், அந்த விஜயம் சில வாரங்களுக்கு ஒத்திவைக்கப்படுவதாக புதுடில்லியில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பயண அட்டவணை, அது தொடர்பான ஒழுங்குகளைத் திட்டமிடுவதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே வெளியுறவுச் செயலரின் கொழும்பு விஜயம் ஒத்திவைக்கப்படுவதாக புதுடில்லியில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஜெனிவாப் பேச்சுக்குப் பிந்திய நிலைமை காரணமாக வெளியுறவுச் செயலரின் விஜயம் உடனடியாகத் தவிர்க்கப்படுவதாக சில ராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜெனிவாப் பேச்சு முடிவு எதனையும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு ரூ. 110 மில்லியன் செலவில் புதிய கட்டடம் நிர்மாணம்

முல்லைத்தீவு, நவ.2

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கார்ப் திட்டத்தின்கீழ் முல்லைத்தீவு வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதி நேற்று வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

110 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் கூடியதாக இந்தக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதன் திறப்புவிழா நேற்றுக்காலை முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.வி.ஜெயகுலராஜா தலைமையில் நடைபெற்றது. பொதுச்சுடர்,

(08ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் பட்டினியும் பஞ்சமும் தோன்றும் நிலை

## உடனடியாக ஏ - 9 பாதையை அல்லது மாற்று வழியை திறந்து விடுக

### ஜனாதிபதிக்கு யாழ். ஆயர் அவசர தந்தி

யாழ்ப்பாணம், நவ.02

யாழ்ப்பாணத்தில் பட்டினியும் பஞ்சமும் உண்டாகும் நிலை தோன்றி வருகிறது.

அதனைத் தடுப்பதற்கு உடனடியாக ஏ-9 பாதையை அல்லது அதற்கு மாற்றீடான ஒரு பாதையைத் திறப்பதற்கு வழி செய்யவும்.

இவ்வாறு வலியுறுத்தும் அவசர தந்தியை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் மக்கள் இன்று எதிர்நோக்கும் அவலத்தை தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் இருந்து ஏற்பட்ட உணவுப் பஞ்சம் கடந்த 3 மாதங்களில் மிகவும் மோசமான நிலைக்கு வந்துள்ளது.

இன்று யாழ்.நகரில் எங்கு பார்த்தாலும் மக்கள் உணவிற்காக நீண்ட வரிசைகளில் காத்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பேச்சுக் குழுவினர் நேற்று கிளிநொச்சி திரும்பினர்

கிளிநொச்சி, நவ. 02

அரசு - புலிகள் பேச்சுகளுக்கு ஜெனிவா சென்ற சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று மாலை 1.30 மணியளவில் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தனர்.

தமிழ்ச்செல்வன் குழுவினர் நேற்று முன்தினம் சுவிற்ஸர்லாந்தின் சூரிச் நகரிலிருந்து கொழும்புக்கு புறப்பட்டனர். குழுவினர் நேற்றுக்காலை 8.15 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

வழமையான சுங்கச் சோதனைகளின் பின்னர் அவர்கள் ஹோட்டலொன்றில் ஓய்வு பெற்றபின்னர் விசேட ஹெலிக்கொப்டர் மூலம் கிளிநொச்சி புறப்பட்டனர்.

புலிகளின் குழுவினரது பாதுகாப்பான பயணத்துக்குரிய ஏற்பாடுகளை நோர்வே தூதரகமும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் செய்திருந்தனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு-கட்டுமுறிவில் நேற்று விமானத் தாக்குதல்!

மட்டக்களப்பு, நவ.2

மட்டக்களப்பு மாவட்டம் கட்டுமுறிவுப் பகுதியில் விமானப்படையினர் நேற்றுப் புதன்கிழமை காலை 8 மணியளவில் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதல் காரணமாக அப்பகுதி மக்கள்வேறிடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்ட அதேவேளைவாழைச்சேனை காகித ஆலை மற்றும் கரடிக்குளம் ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து பொது மக்கள் குடியிருப்புப் பகுதிகளான வாகரை, பனிச்சங்கேணி, கிரிமிச்சை, ஆலங்குளம் பகுதிகளை நோக்கி பல்குழல், ஆட்லறி எறிகணை வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் பாரிய படை நடவடிக்கைக்கு இராணுவத்தினர் திட்டமிட்டு வருகின்றனர் என்று விடுதலைப் புலிகள் தரப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் சந்திப்பு

கொழும்பு, நவ.02

ஜெனிவா பேச்சுக்களில் கலந்து கொண்ட விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை, இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தினர் என்று கூறப்படுகிறது.

நேற்றுக்காலை கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்த விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள், சோதனைகளின் பின்னர் ஹோட்டல் ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை அமெரிக்கா தவிர்ந்த ஏனைய இணைத்தலைமை (08ஆம் பக்கம் பார்க்க)

## ஆள்கடத்தல்களுக்கு எதிராக கோட்டையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ.2

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழர்கள் கடத்தப்படுவதைக் கண்டித்தும் கடத்தப்பட்டோரைக் கண்டுபிடிக்கும்படி கோரியும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நேற்றுப் பகல் கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றுள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் பகல் 12 மணிக்கு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன ஏற்பாடு செய்திருந்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுததாரிகள் வீடு புகுந்து கண்டபடி சூடு தாய் படுகாயம்; மகன் விசாரணைக்கு!

### இணுவிலில் நேற்றிரவு சம்பவம்

ஆயுததாரிகள் வீடு புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். அத்துடன், அவரது மகன் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 9.30 மணியளவில் இணுவில் மேற்கில் இடம்பெற்றுள்ளது. திடீரென வள்வினுள் பிரவேசித்த பத்திற்கும் - பதினைந்திற்கும் இடையிலான ஆயுததாரிகள் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என்றும் -

பின்னர், வீட்டினுள் நுழைந்த ஆயுததாரிகள் அங்கும் (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




நேற்று கிளிநொச்சி வந்தடைந்த விடுதலைப்புலிகளின் பேச்சுக் குழுவினரை முதலாவது படத்திலும், மைதானத்தில் விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களுக்கு பேட்டியளிப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

### ஜெனிவாப் பேச்சின் தோல்வியை அடுத்து என்ன நடவடிக்கை?

# இலங்கை நிலைமையை விவாதிக்க இணைத்தலைமை இம்மாதம் கூடும்

கொழும்பு, நவ. 02

அரசு - விடுதலைப் புலிகள் இடையிலான ஜெனிவாப் பேச்சுகள் தோல்வியடைந்ததை அடுத்து சர்வதேச சமூகத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக டோக்கியோ மாநாட்டின் இணைத்தலைமை நாடுகள் இம்மாத இறுதியில் மீண்டும் கூடவுள்ளன.

அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றை உள்ளடக்கிய இணைத்தலைமை பெருமாலும் இம்மாத இறுதியில் பிரஸல்ஸ் நகரில் கூடி இலங்கை நிலைமையை விவாதிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செப்டெம்பரில் நடைபெற்ற இணைத் தலைமையின் கூட்டத்தில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்ட அவசர செயற்பாடுகளை தரப்புகள் எந்தளவுக்கு கடைப்பிடித்துள்ளன என்பதை இணைத் தலைமை இம்மாதம் கூடி மதிப்பிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

உடனடி மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பிலும், வலிந்த தாக்குல்கள் தொடர்பாகவும் இரண்டு தரப்புகளையும் இணைத் தலைமையின் கூட்டறிக்கை விரைந்து முன்னேற்றம் காணுமாறு வற்புறுத்தியிருந்தது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் எல்லா வகையான வன்முறைகளையும் கட்டுப்படுத்துமாறும் புலிகளையும், அரசுத் தரப்பையும் இணைத்தலைமை கேட்டிருந்தது.

இந்நிலையில் -

ஜெனிவா நகரில் இருதினங்கள் நடைபெற்ற பேச்சுகள் தீர்மானங்கள் எதுவுமின்றி தோல்வியில் முடிவடைந்தமை இணைத் தலைமைக்கு ஏமாற்றமளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## வவுனியா தேக்கங்காடு பகுதியில் நேற்று கிளைமோர் வெடிப்பு! பெண் மரணம்!

### படைச்சிப்பாய்கள் இருவருக்கு காயம்

வவுனியா, நவ.2

வவுனியா தேக்கங்காடு பகுதியில் நேற்று நண்பகல் நடத்தப்பட்ட கிளைமோர்க் குண்டுத் தாக்குதல் காரணமாக பெண் ஒருவர் கொல்லப்பட்டார். இரண்டு இராணுவச் சிப்பாய்கள் காயம் அடைந்தனர். பொலிஸார் ஒருவரும் சிறு காயத்திற்கு உள்ளானார் என்று வவுனியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் தெற்குத் திசையில் இருக்கும் தேக்கங்காடு பகுதியில் அமைந்துள்ள வீதிச் சோதனைச் சாவடி மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகில் நின்றிருந்த பெண் அதிர்ச்சியில் உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது. காவல் கடமையில் இருந்த இரண்டு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள் ளனர்.

அதிர்ச்சியில் உயிரிழந்த பெண் கோவிந்தசாமி ஜெகதாம்பாள் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர். இச்சம்பவம் காரணமாக அப்பகுதி யில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. (ஐ-164)

### கணிப்பீட்டுக் கருவிகள் தயாரிப்பு பற்றிய செயலமர்வு

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 7 இல் தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான, கணிப்பீட்டுக் கருவிகள் தயாரிப்பது சம்பந்தமான செயலமர்வு எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புலோலி மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. தரம் 7இல் தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் இச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ப-182)

## ஓடு, மரம் தட்டுப்பாட்டால் நிறைவு பெறாத 40 வீடுகள்

### சுனாமி பாதித்த மக்கள் அவலம்

வடமராட்சி கிழக்கு, நவ.2

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென கட்டப்பட்ட வீடுகள் ஓடு, மரம் ஆகியவற்றின் தட்டுப்பாடு காரணமாக நிறைவுபெறாத நிலையில் உள்ளன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாகர்கோவில் பகுதி மக்களுக்கென கற்கோவளம் புனிதநகரில் அமைக்கப்பட்டுள்ள 40 வீடுகளே இந்நிலையில் உள்ளன.

வீடுகள் அமைக்கும் வேலையின் பெரும் பகுதி பூர்த்தியடைந்த நிலையில் உள்ள அதே சமயம் ஓடு, மரம் ஆகிய பொருள்களைப் பெற முடியாதுள்ளமையினா வீடுகளை உரியவர்களிடம் கையளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் அம்மக்கள் மழைகாலத்திலும் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகைகளிலேயே வாழ்ந்து வருகிறார்கள்.

இம் மக்களுக்கான வீடமைப்பு பணியினை யு.என்.டி.பி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. (ப-182)

### உணவு விநியோகத்தை கண்காணிக்க ஏற்பாடு

வடமராட்சியில் கூட்டுற புக்கி ளைகள் மூலம் இடம்பெறும் உணவு விநியோகத்தை அவ்வப்பகுதி கிளைக்குழுக்களைக் கண்காணிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிளைக்குழுக்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகம் அழைத்து இவ்வேண்டுகோளை விடுத்துள்ளது.

இதன் மூலம் பொது மக்களுக்கு ஏற்படும் அசெளகரியங்களை குறைக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ப-182)

## ஷெல் தாக்குதலில் காயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காததால் மரணம்

தென்மராட்சி, நவ.02

உசன் பகுதியில் எறிகணைத் தாக்குதலில் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த குடும்பப்பெண் ஒருவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் 18 நாள்களின் பின்னர் மரணமானார்.

மிருசுவில் உசனைச் சேர்ந்த சரவணமுத்து கருணாநிதி (வயது 40) என்பவரே மரணமானவராவார்.

கடந்த 12ஆம் திகதி உசன் கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் எறிகணை வீழ்ந்து வெடித்ததில் காயமடைந்த இவர் நேற்று முன்தினம் யாழ்.பே னா வைத்தியசாலையில் மரணமானார்.


### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

நந்தகுமார்-ஜீவதயா தம்பதியரின் செல்வப்புதல்வி திவ்வியா 02.11.2006 அன்று தனது முதலாவது பிறந்த நாளை கனடாவில் கொண்டாடுகின்றார்.



திவ்வியா



பிரியங்கா

செல்வராசா-நவமலர் தம்பதியரின் செல்வப் புதல்வி பிரியங்கா 10 ஆவது பிறந்த நாளை செவ்வாய்க்கிழமை 14.11.2006 சங்குவேலி, டச்சுறோட்டில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறாள்.

வாழ்த்துவோர்,
சித்தப்பா, மாமா, அத்தைமார்.

கனடா. (54857)


## யாழ். நகரப் பகுதியில் நேற்றும் அங்காடி வியாபாரி கொலை!

யாழ்ப்பாணம், நவ.2

யாழ். நகரில் அங்காடி வியாபாரி ஒருவர் நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்னர் அவர் மீது பெற்றோல் ஊற்றப்பட்டு தீமூட்டப்பட்டது.

நாவாந்துறை - கெனடி வீதியைச் சேர்ந்த - இரண்டு பிள்ளைகளின் தந்தையான - திருச்செல்வம் சுரேந்திரன் (வயது - 35) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இவர் யாழ். முனீஸ்வரன் வீதியில் உள்ள தனது அங்காடி விற்பனை நிலையம் முன்பாக வைத்துக் காலை 8.15 மணியளவில் சுடப்பட்டார்.

குறிப்பிட்ட நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியவர்கள், சூட்டுக்குக்கு இலக்கான நபர் மீது தாம் எடுத்து வந்த பெற்றோலை ஊற்றியதுடன் தீமூட்டிவிட்டுச் தப்பிச் சென்றுவிட்டனர் என்று கூறப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணை நடத்தியதுடன், சடலத்தை பிரதே பரிசோதனைகளுக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

யாழ் நகரப் பகுதியில் இந்த வாரத்தில் கொல்லப்பட்ட இரண்டாவது அங்காடி வியாபாரி இவராவார். கடந்த திங்களன்றும் வியாபாரியான இளைஞர் ஒருவர் அடையாளந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். (ஐ-203-57)

### 30 கடற்றொழிலாளர்களுக்கு உணவுக்களஞ்சியத்தில் வேலை

நல்லூர், நவ.2

நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் வேலை செய்வதற்கென நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீனவர்களில் ஒரு தொகுதியினர் சென்றுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

மீனவர்கள் தமது தொழில்களை இழந்து வருமானம் எதுவுமின்று பலத்த கஷ்டங்களில் வாழ்ந்து கொண்டு வருகின்றார்கள். அவர்களின் ஜீவனோபாயத்திற்கென கடற்றொழிலாளர்களால் செய்யக்கூடிய மாற்று வேலைகளைப் பெற்றுக்கொடுக்க எமது சமாசம் எடுத்துவரும் முயற்சிகளின் ஒருபகுதியாகவே 30 மீன்பிடித்தொழிலாளர்களை உணவுக்களஞ்சியத்தில் வேலை செய்வதற்கென சம்மேளனம் அனுப்பியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (111-88)

### இறந்தவர்களின் ஆத்மாக்களுக்கான வழிபாடு இன்று

குருநகர், நவ.2

இறந்த ஆத்மாக்கள் தினம் இன்றாகும். இறந்தவர்களை அடக்கம் செய்துள்ள சேமக்காலைக்குச் சென்று அவர்களது புதைகுழிகள் முன்பாக கத்தோலிக்க மக்கள் இன்று வழிபாடு நடத்துவர். யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோலிக்க மக்களது தேவாலயங்களில் இவர்கள் நினைவாக இன்று காலை திருப்பலிகள் இடம்பெறும்

யாழ். சென் பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள புனித செஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு விசேட திருப்பலி இடம்பெறும். (ப-51)

### செய்முறைப் பரீட்சைக்கு இதுவரை தோற்றாத மாணவர் கவனத்துக்கு

தென்மராட்சி, நவ.2

தென்மராட்சி கல்வி வலய ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் சங்கீதம் நடனம் ஆகிய பாடங்களுக்கு தோற்றும் மாணவர்களுக்கு நடத்தபட்ட செய்முறை கணிப்பீட்டுப் பரீட்சைகளில் இதுவரை தோற்றாத மாணவர்களை நாளை வெள்ளிக்கிழமை பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

### கடந்த 29 ஆம் திகதி வெளிவந்த புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளின் விடைகள் வருமாறு:-

**வினாத்தாள் 1**

01)3, 02)1, 03)D, 04)C, 05)II, 06)I , 07)2, 08)01, 09)2, 10)3, 11)1, 12)1, 13)3, 14)2, 15)2, 16)3, 17)2, 18)2, 19)2, 20)2, 21)1, 22)3, 23)3, 24)3, 25)அ, 26)O, 27)ம, 28)Yellow, 29)3, 30)1, 31)3, 32)2, 33)3, 34)1, 35)3, 36)1, 37)2, 38)1, 39)2, 40)1

**வினாத்தாள் 2**

**01)** 1)ஆழி/சாகரம்/பரவை 2). மடு/பள்ளம்3) நீ 4). உங்களுக்கு 5). அல்லும் பகலும்6)அதிகமான/ எண்ணற்ற/அளவற்ற7). மகரமீன்கள் 8). சிப்பி 9). விலை மதிப்பான 10). முத்து+அளிக்கும்

**02)** 1).ஆசிரியர் வகுப்பறைக்கு வந்த போது மாணவர் வணக்கம் தெரிவித்தனர். 2) அவன் மேசை மீது ஏறி நின்று சுவரிலே ஆணி அறைந்தான்.

**03)** 1-3 2-2

**04)** 1). ஏமாற்றம் அடைதல் 2). துன்பத்தின்மேல் துன்பம்

**05)** 1). போலி 2). ஆத்திகன்

**06)** 1).தயவுசெய்து அமைதியாக இருங்கள் 2). தயவுசெய்து எழுந்த நிற்கவும் 3). நான் உள்ளே வரலாமா?

**07)** 1)Four, 2) Red 3) Trees 4) Teacher

**08)** 1). காதுகள் 2). அன்னாசிப்பழம் 3). கடல் 4). கிளி

**09)** 1). நீங்கள் என்ன குடிக்கின்றீர்கள்? 2). நான் பால் குடிக்கின்றேன்.

**10)** புலிநகம், ஆடையொட்டிவேங்கை , எண்ணெய்,பொன்னாவரை, இறப்பர்

**11)** 1)1, 2)1, 3) 1, 4),2 5) 3, 6)2, 7)1, 8)1, 9)3, 10)2, 11)2, 12)3, 13)3, 14)2, 15)2, 16)2, 17)1,18)4, 19)1, 20)4

**12)** 1)கரப்பந்தாட்டம், 2)எல்லே

**13)** 1)ஆடாதோடை 2) முடிதும்பை

**14)** 1)புறா 2)கிளி 3) வாத்து 4) பருந்து

**15)** 1) 35 2)50 3) 85 4) 2400ரூபா 5. நாவல் சரித்திரம்

**16)** 1) 9 2) 22ரூபா 3) 48 4)7 5) 1989 6) 8சதுர சென்ரி மீற்றர் 7) 24ரூபா 8) 14/ 650M 9. 144ரூபா 10) 10 11)107 12) 75ரூபா 13) 11/14 14) 12 15) பி.ப. 12.15 16). வடகிழக்கு 17) 2Km 18) 950 g

**17)** கட்டுரை பொருத்தமான வசனங்கள் எழுதப்படல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# பிரதான கட்சிகளின் இணக்கப்பாடு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவுமா?

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பொது இணக்கப்பாடு, பெரும்பான்மைச் சிங்களமக்களின் இரண்டு பெரிய கட்சிகள் இடையேயும் ஏற்பட்டிருப்பதால் தீர்வுக்கான பொதுத் திட்டம் ஒன்று தென்னிலங்கையினால் விரைந்து முன்வைக்கப்படும் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், பிரதான கட்சிகளின் இணக்கப்பாடு அறிவித்தலோடு எல்லாம் கிணற்றில் போட்ட கல்லாக அடங்கி விட்டது. தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதற்கான ஆரம்ப நகர்வுகள் கூட இந்த இரு பிரதான கட்சியினர் மட்டத்தில் கூட்டாக ஆரம்பிக்கப்படவில்லை; ஆரம்பிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

உத்தேசத் தீர்வுத் திட்டத்தை சிபார்சு செய்வதற்காக ஸ்தாபிக்கப்படுகின்றது என்ற பெயரோடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தை இதுவரை பகிஷ்கரித்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி இனி அந்தக் கூட்டங்களில் பங்குபற்றும் என்ற ஏற்பாட்டோடு - அறிவிப்போடு - விவகாரம் முடிந்து விட்டது.

அரசு - புலிகள் இடையேயான ஜெனிவா - 2 பேச்சுக்கு முன்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஐ.தே.கட்சி உடன்பாடு குறித்து அதிகம் பேசப்பட்டது. ஜெனிவாப் பேச்சு பயன் தராமல் தோல்வியில் முடிந்ததை அடுத்து இந்த உடன்பாட்டு விவகாரமும் கூட கிடப்பில் போடப்பட்டு விட்டது.

இந்தப் பொது உடன்பாடு காரணமாக இரண்டு பிரதான கட்சிகளும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு என்ன திட்டத்தை முன்வைக்கவுள்ளன என்பதை விட, இந்த உடன்பாடு மூலம் பிரதான எதிர்க்கட்சிக்கு எத்தனை அமைச்சர்கள், எத்தனை பிரதி அமைச்சர்கள் பதவிகள் கிடைக்கும் என்பது குறித்து நோக்குவதும், சிந்திப்பதுவுமே தென்னிலங்கையின் பிரதான சிரத்தையாக இருப்பதும் கவனிக்கத்தக்கது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தமது கட்சியின் சார்பில் பிரதான எதிர்க்கட்சியுடன் இப்போது பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வந்திருக்கின்றார் என்றாலும் -

இதற்கு முன்னர் - அவர் ஜனாதிபதியாவதற்கு முன்பு - இதே போன்ற ஒரு பொது இணக்கப்பாட்டை தென்னிலங்கையின் பௌத்த - சிங்களப் பேரினவாதக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. ஆகியவற்றுடன் செய்திருந்தார் என்பதும் -

மஹிந்த ராஜபக்ஷ தாமே நேரில் ஒப்பமிட்ட அந்தப் பொது இணக்க உடன்பாடுகளின் வலுவினால்தான் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் அவரால் ஜனாதிபதியாக வர முடிந்தது என்பதும் - கவனிக்கத்தக்கவை.

அந்த இணக்கப்பாடுகளுக்கு அடிப்படை விடயங்களில் முரண்பட்ட வகையில் இப்போது அவரது கட்சி, பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கவுடன் செய்து கொண்டுள்ள உடன்பாடு அமைந் துள்ளது.

ஆனால், மஹிந்தர் தாம் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடன் தேர்தலுக்கு முன்னர் செய்து கொண்ட - தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதை முற்றிலும் மறுத்துரைக்கின்ற - இரு உடன்பாடுகளையும் தாம் கைவிட்டு விட்டார் என்று அறிவிக்காத நிலையிலேயே இப்போது அவரது கட்சி மூன்றாவது உடன்பாட்டை ஐ.கே.கவுடன் செய்திருக்கின்றது.

அதாவது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது உட்பட இலங்கைத் தீவின் எரியும் பிரச்சினைகள் தொடர்பாக ஒன்றுக்கொன்று முரண்பட்ட - அல்லது மாறுபட்ட - அம்சங்களைக் கொண்ட மூன்று ஒப்பந்தங்களைத் தம் வசம் வைத்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்தர்.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றுடன் செய்து கொண்ட உடன்பாடுகளைத் தாம் முறித்துக் கொண்டு விட்டார் என அறிவித்த பின்னர், அவர் ஐ.தே. கட்சியுடன் தற்போதைய உடன்பாட்டைச் செய்திருப்பாரேயானால் இந்த இணக்கப்பாடு குறித்து கொஞ்ச நஞ்சமேனும் தமிழர்கள் நம்பிக்கை கொள்ளலாம்.

ஆனால், இரு தோணிகளில் கால் வைத்தவர் போல ஒருபுறம், பௌத்த - சிங்களப் பேரினவாதிகளையும் 'தாஜா' செய்து கொண்டு, மறுபுறம் பிரதான எதிர்க்கட்சியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது உட்பட பொது விடயங்களில் பொது இணக்கப்பாட்டுக்கு வந்தவர் போல அவர் போடும் இரட்டை வேடம் தமிழர்களுக்கு எந்த நம்பிக்கையையும் ஏற்படுத்தப் போவதில்லை.

இப்போது இரு பிரதான கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள போதிலும் -

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை முன்வைக்கும் விடயத்தில் அவை இரண்டும் ஒருங்கு சேர்ந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு முன் நகர்வுகளை வெளிப்படுத்தா விட்டால் -

இந்த இணக்கப்பாட்டால் எந்தப் பலனும் இலங்கைத் தீவுக்குக் கிடைக்கப் போதில்லை.

இந்த இரு பிரதான கட்சிகளும் ஏதோ இப்போதுதான் ஒன்றுபட்டு செயற்பட முன்வந்திருக்கின்றன என்பது போன்ற தோற்றம் ஒன்றையும் வெளிப்படுத்த தென்னிலங்கையில் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

ஆனால், அத்தோற்றம் முற்றிலும் தவறானது

சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதில் அவ்வப்போது இக்கட்சிகள் ஒன்றுபட்டே வந்திருக்கின்றன.

தமிழர்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவ்வப்போது கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டங்கள் போன்றவற்றின் விடயத்தில் பிரதான கட்சிகள் இரண்டும் ஒன்றுபட்டு நின்றமையே வரலாற்று அனுபவமாகும்.

இப்போதைய இணக்கப்பாடு கூட, இராணுவப் பலத்தில் மெல்ல மெல்ல மேன்மையுற்று, தமிழர் தாயகத்தில் தனி நிர்வாக முறைமை ஒன்றை உறுதிப்படுத்துவதில் தமிழர்கள் தீவிரம் காட்டும் நிலையில், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தெளிவான வரையறைகளை வெளிப்படுத்தாத உடன்பாட்டு வாசகங்களுடன் பிரதான கட்சிகள் இரண்டும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருப்பது தமிழர்களுக்கு சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது.

பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்ற தமிழர் எதிர்ப்பு விவகாரங்களில் ஒன்றுபட்ட நோக்கிலேயே, தமிழர் விரோதப் போக்குக்கான தென்னிலங்கையின் ஐக்கியமாக இந்த உடன்பாட்டையும் சிறுபான்மையினரான தமிழர்கள் பார்க்கின்றனர்.

# நேற்றும் 21 மீனவர்கள் குருநகர் வந்தடைந்தனர்

குருநகர், நவ.2

வன்னியில் தங்கியிருந்த மேலும் 21 மீனவர்கள் நேற்றைய தினம் கடல் வழியாக குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர்.

இவ்வாறு வந்து சேர்ந்தவர்களில் மூவர் மண்டைதீவைச் சேர்ந்தவர்கள் என்றும் - ஏனையோர் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட 21 மீனவர்களும் 6பிளாஸ்ரிக் படகுகளில் வெள்ளைக்கொடியுடன் நேற்றுக்காலை 6.30 மணியளவில் குடாக்கடலில் உள்ள முகத்துவாரக் கட்டைப் பகுதியை வந்தடைந்தனர் என்றும் -

அப்போது குறிப்பிட்ட கடல் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்றும் -

எனினும் மீனவர்கள் ஒருவாறு தப்பி குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் உடனடியாக குருநகர் இறங்குதுறைக்குச் சென்று குறிப்பிட்ட மீனவர்களின் வருகை தொடர்பாக படையினரிடம் எடுத்துக் கூறினார். அதனைத் தொடர்ந்து படையினர் 21 மீனவர்களையும் விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் வீடு செல்ல அனுமதித்தனர்.

குறிப்பிட்ட 21 மீனவர்களும் வலைப்பாடு மீனவர் சங்கத்தின் அனுமதியுடன் குருநகர் நோக்கி பயணித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(51)

## பட்டமளிப்பு விழாவுக்கு பெயர்பதிவு செய்த மாணவர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், ஒக்.2

எதிர்வரும் 8ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளச் செல்வதற்கென தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்த யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்களை இன்று காலை 9 மணிக்கு நிறுவனத்திற்கு சமுகமளிக்குமாறு உயர்தொழில்நுட்பவில் நிறுவன பழைய மாணவர் சங்கச் செயலாளர் வி.தயாபரன் கேட்டுள்ளார்.

## பாண் உற்பத்திக்கு ஒரு வாரத்திற்கான மா நேற்று பேக்கரிகளுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.2

ஒருவார காலத்திற்குப் பாண் உற்பத்தியை மேற்கொள்வதற்கான கோதுமை மா யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பேக்கரிகளுக்கும் நேற்று விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்று யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பேக்கரிகளுக்கும் நேற்று முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு பாண் உற்பத்திக்கென 329.7 மெற்றிக்தொன் கோதுமை மா வழங்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம், யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் கூ. சங்கம், ப.நோ.கூ.சங்கம் ஆகியவற்றின் ஊடாக பேக்கரிகளுக்கு மா விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

பேக்கரிகளுக்கு மா வழங்குவதற்கென யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்திற்கு 203 ஆயிரம் கிலோகிராமும், யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர் கூ. சங்கத்திற்கு 114 ஆயிரத்து 100 கிலோகிராமும், சங்கானை ப.நோ.கூ. சங்கத்திற்கு 3 ஆயிரத்து 150 கிலோகிராமும், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கத்திற்கு ஆயிரத்து 750 கிலோகிராமும், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கத்திற்கு 3ஆயிரத்து 150 கிலோகிராமும், அனலைதீவு ப.நோ. கூ.சங்கத்திற்கு ஆயிரத்து 50 கிலோகிராமும், நெடுந்தீவுக்கு 3 ஆயிரத்து 500 கிலோகிராமும் கோதுமை மா விநியோகம் செய்யப்பட்டுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(1-203)

## இரண்டு ரூபாவால் பாண் விலை உயர்வு

யாழ்ப்பாணம், நவ.2

குடாநாட்டில் பாணின் விலை நேற்று முதல் இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி 28 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த 450 கிராம் பாண் ஒன்றின் விலை 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

விலை அதிகரிக்கப்பட்ட போதும் பாணுக்கான தட்டுப்பாடு குடாநாட்டில் தொடர்ந்தும் நிலவி வருகின்றது.

(1-203-111)

# 257 குடும்பங்கள் தங்கியுள்ள முகாமில் பலவித கஷ்டங்களை எதிர்கொள்ளும் நிலை


யாழ்ப்பாணம், நவ.2

மண்டைதீவு, அல்லைப்பிட்டி மற்றும் பாஷையூர் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். அடைக்கல மாதா தேவாலயத்தில் தங்கியுள்ள சுமார் 257 குடும்பங்கள் தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாகப் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

தேவாலய வளாகத்தில் உள்ள பாடசாலையிலேயே இம்மக்கள் தங்கியுள்ளனர். பாடசாலையில் மழை ஒழுக்குக் காரணமாகத் தாம் கஷ்டங்களை எதிர்கொள்வதாகவும் -

தங்கியிருக்கும் மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவு மலசல கூடங்கள் இன்மையால் சுகாதாரச் சீர்கேடுகள் உருவாகும் நிலை தோன்றியுள்ளது எனவும்- அந்த மக்கள் உதயனுக்கு கவலையுடன் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வியைக் கருத்தில் கொண்டு தற்காலிகக் கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் மழை வெள்ளம் புகுந்ததால் தறப்பாள் விரித்தே மாணவர்கள் கல்வி கற்கின்றனர். பல மாணவர்கள் நாவாந்



துறைக்கு நடந்து சென்றே கல்வி கற்கின்றனர்.

இம்முகாமில் பச்சிளம் குழந்தைகள், நோயாளிகள், வயோதிபர்கள் எனப்பலரும் தங்கியுள்ளனர். முகாமைச்சூழ வெள்ளம் தேங்கி நிற்பதாலும் நுளம்பு பெருக்கத்தாலும் இவர்கள் பலவிதமான கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

(202-79-111)

## இடம்பெயர்ந்துள்ள புலமைப் பரிசில் மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ.2

நாளை மறுதினம் நடைபெறவுள்ள 5 ஆம் தரப் புலமைப் பரிசில் விசேட பரீட்சையில் வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள மாணவர்களையும் யாழ்ப்பாணத்திற்குள்ளே இடம்பெயர்ந்து பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலையிலுள்ள மாணவர்களையும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

இம் மாணவர்கள் உடனடியாக யாழ். வலயக்கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(202)

## சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேவையெனின் ஒரு மாதத்திற்கு முன் பதிவு செய்ய வேண்டும்

யாழ்ப்பாணம், நவ.2

மகப்பேற்றுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தருவோர் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரின் அம்புலன்ஸ் சேவையைப் பெற விரும்பின், ஒரு மாதத்திற்கு முன்னரே பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இரவு நேரங்களில் அம்புலன்ஸ் சேவையை அழைக்கும் போது முகவரியைத் தேடி அலையும் சிரமத்தைத் தவிர்க்கும் பொருட்டே பதிவு செய்யுமாறு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் கேட்டுள்ளனர்.

பதிவு செய்ய விரும்புவோர் யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் காரியாலயத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுப் பதிவு செய்யலாம்.

அம்புலன்ஸ் சேவையைப் பெற விரும்புவோர் பகல் நேரத்தில் 222 3166 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் இரவு நேரத்தில் 222 5599 என்னும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு அம்புலன்ஸ் சேவையினர் கேட்டுள்ளனர்.

(202)

## நாளை

ஐப்பசி 17
வெள்ளிக்கிழமை
03.11.2006
திதி : திரையோதசி
முன்னிரவு : 11.29
நட்சத்திரம் : உத்தராட்டாதி
பிற்பகல் : 12.56
சுபநேரம் : 06.04 - 07.34
ராகுகாலம் : 10.34 - 12.04

## மாநகரசபைப் பகுதியில் இன்று பால்மா விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.02

யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள குழந்தைகளுக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் பால்மா விநியோகம் செய்யப்படவுள்ளது.

கீழ்வரும் இடங்களிலும் அனைத்துச் சிகிச்சை நிலையங்களிலும் அங்கர் 1+, அங்கர் 3+ போன்ற வகைப் பால்மா விநியோகம் செய்யப்படவுள்ளது.

இன்று வியாழக்கிழமை பாசையூர் சிகிச்சை நிலையம், நல்லூர் சிகிச்சை நிலையம் ஆகியவற்றிலும் -

நாளை வெள்ளிக்கிழமை சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம், நாவலர் வீதி சிகிச்சைநிலைய, கொட்டடி சிகிச்சை நிலையம், அரியாலை மகப்பேற்று நிலையம், கந்தர்மடம் சிகிச்சை நிலையம், வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம், குருநகர் மகப்பேற்று நிலையம் ஆகியவற்றிலும் -

நாளை மறுதினம் சனிக்கிழமை யூபிலி மகப்பேற்று நிலையத்திலும் - பால்மா விநியோகம் இடம்பெறும் என்று யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்துள்ளார்.

(1-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் அதிபர்

### திரு.வ.ஆறுமுகம்

அவர்களின் கல்விச் சேவையைப் பாராட்டுவதுடன் அவர் ஓய்வுக் காலத்தில் பல வளங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழவும் தொடர்ந்தும் சமூகப் பணியினை செய்திடவும் இறைவன் அருள் பெற்றிட வாழ்த்துகின்றோம்.

யாழ்.வோச் வேக்ஸ் குடும்பத்தினரும் ஊழியர்களும்.

55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (54829)

## ஏழாம்திருமுறை முற்றோதல்

நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவும் பொருட்டு அகில இலங்கை திருமுறை மன்றம் குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் மாதம் ஒரு கோயிலில் செய்து வருகின்றது.

இதற்கமைய கடந்த மாதம் 18ஆம் திகதி தொடக்கம் யாழ். பல்கலைக்கழக வளாகத்திலுள்ள ஸ்ரீ பார்வதி ஆம்பாள் சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் ஏழாம் திருமுறை முற்றோதல் செய்து வருகின்றனர்.

## திருமண வாழ்த்து



நிகழும் மங்களகரமான விய வருஷம் 03.11.2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.15 மணி தொடக்கம் 12.45 மணிவரை தெய்வேந்திர முகூர்த்தத்தில்

நவாலியூர் **செல்வராஜா சுரேஷ்**
(Teacher, Chava m.c.)
BAF (Acc), Hons, P.G.Dip in Edu., P.G.Dip in Mgt.

சிறுப்பிட்டி **பரராஜசேகரம் மகாதேவி**
Programme Assistant (Finance) DPDHS JAFFNA
B.Com (Hons)

அவர்களுக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தான மண்டபத்தில் திருமணம் இடம்பறும். மண மக்களை மனதார வாழ்த்துகின்றோம்

HEMA HOUSE
Pulavar Rd.,
Navaly North, Manipay.

T.P.: 0602212676

HSCMF NAVALY

## வடமராட்சியில்...

## ENGLISH MEDIUM CLASSES
## Grade: 6,7,8,9
## Grade 6 ADMISSION TEST

(11-11-2006 சனிக்கிழமை)

* அனுமதிப் பரீட்சைக்குரிய விண்ணப்பம் வழங்கும் இறுதித் திகதி (06-11-2006 திங்கட்கிழமை)
* அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றாத எந்த மாணவர்களுக்கும் எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது.
* அனுமதி 18 மாணவர்களுக்கு மட்டுமே.
* எங்கள் நிறுவனத்தில் அனுமதி கிடைத்தால் தங்கள் பிள்ளை
1) புலமைப் பரிசு பரீட்சையில் சித்தி
2) பிரபல்ய முன்னணிப் பாடசாலைகளில் அனுமதி என்பவற்றுக்கு உறுதிப்படுத்தலாம்.
* மற்றைய வகுப்புகளுக்கும் வரையறுத்த அனுமதி உண்டு.

ஆய்வுகூட வசதிகள் கொண்ட ஒரே தனியார் நிறுவனம்

தொடர்புகளுக்கு:
"ரவீன்ஸ்"
சிங்கத்தின் வீடு
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
தொலைபேசி: 021 226 3321
060 221 2408

(54840)

'ENGLISH IS A GLOBAL LANGUAGE'

## விற்பனைக்கு

100மணித்தியாலத்திற்குக் குறைவாகப் பாவிக்கப்பட்ட ஜெனறேற்றர் (மண்எண்ணெய) ஹொண்டா 650K 550W விற்பனைக்குண்டு. விரும்புவோர் இளவாலை, அழகுநிலா தொலைத் தொடர்பகத்தில் சமுகமளித்துப் பார்வையிடலாம். விலை. 38,000 ரூபா. (54830)

## Spoken & Grammar

ஆங்கிலக் கற்கை நெறிகள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (குழு/தனி) (அச்சடித்த பாடங்கள், பயிற்சிகள்)

**யாருக்காக :** O/L, A/L, Higher Studies. வெளிநாடு செல்லவுள்ளோர், பாடசாலை விலகியோர்.

**காலம் :** 24Hrs (A Crash Course)

Courses Conducted by:
Mr.B.Ruban
(A/L English Teacher & B.B.A)

தற்காலிக தொடர்பு 222 3397
(ஒரு வாரத்திற்குள் தொடர்புகொள்க) (54837)

## கண்ணீர் அஞ்சலி

எமது வலய அலுவலகத்தைச் சார்ந்த திரு.ச.பேரின்பநாதன் அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் அப்புக்குட்டி சரவணமுத்து

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

வலயக்கல்வி அலுவலகம் தீவகம். (54546) நலன்புரிக் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

வலி.மேற்கு, சங்கானைப் பிரதேச செயலக கிராம அலுவலர் திரு.க.குலசேகரம் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை

அவர்களின் சிவபதப் பேற்றை அறிந்து துயருற்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், வலி.மேற்கு, சங்கானை. (54849)

பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்.

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம். (off Stanly Rd.)
021-222 8250, 0777- 222422

### ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

**ஒரே நாளில் ஆரம்பம்:- 06/11/2006 -08.30**

ஏனைய அனைத்துக் கணனிக்கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் 03/11/2006, 04/11/2006, 05/11/2006, 08/11/2006 ஆகியதிகதிகளில் ஆரம்பமாகின்றன.

## மரண அறிவித்தல்கள்

### ரவீந்திரன் கோமதி



களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ரவீந்திரன் கோமதி அவர்கள் 31.10.2006 அன்று காலமானார்.

அன்னார் முருகேசுப்பிள்ளை- இராசமணி தம்பதியரின் மகளும் செல்லத்துரை ரவீந்திரனின் அன்பு மனைவியும் பலகாடு செல்லத்துரை - சரஸ்வதி தம்பதியரின் மருமகளுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் இடம்பெறும்.

56, சீனியர்லேன், கலட்டி.யாழ்ப்பாணம். தொ.பே.: 0049202552168 தகவல்: குடும்பத்தினர்.

### செல்லப்பா சிவசுப்பிரமணியம்



காரைநகர், மருதடியைப் பிறப்பிட மாகவும் மன்னார் முருங்கன் 12 ஆம் கட்டையில் வசித்த வரும், தற்போது கனடா, ரொரன்ரோவை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லப்பா சிவசுப்பிரமணியம் 28.10.2006 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் பவானி, விஜயபாலன், தயாளன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாதேவன் (கனடா), தாரிணி, தர்சினி ஆகியோரின் மாமனும் பிரணவன், சரண்யன், சோபிகா, லுவனேஸ், அனோரா ஆகியோரின் அன்புப் பேரனும் அருளம்பலம் (மலேசியா), காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, இராசரட்ணம், மகேஸ்வரி, நாகரத்தினம், சாவித்திரி (லண்டன்), செல்வராணி (லண்டன்) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2006) வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, தகனக்கிரியைகள் முற்பகல் 11 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். இத்துக்கம் பெரியமணல் காரை நகரிலும் அனுஷ்டிக்கப்படும்.

தகவல்:
திருமதி. வ. தனபாலசுந்தரம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது உப அதிபர் தி.ஸ்ரீதரன் அவர்களின் அன்புத் தந்தை

### செல்லையா தியாகராஜா

அவர்களின் மறைவையொட்டி துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/ நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை, அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள். (54831)

## கண்ணீர் அஞ்சலி

மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளரும் கிழக்கு வலயத்தின் உதவிப்பொது முகாமையாளராக அண்மையில் பதவி உயர்வு பெற்றுச் சென்றவருமான துரைசிங்கம் ரகு அவர்களின் பாசமிகு தாய்

### திருமதி துரைசிங்கம் செல்வராணி (ராணியம்மா)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்திஅடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி.சுந்தரலிங்கம் குடும்பத்தினர், இந்தியா. (54845)

## இரண்டாம் வருட நினைவுப் பூக்கள்

மலர்வு 19 - 05 - 1946



உதிர்வு 02 - 11 - 2004

### அமரர் கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்

(ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர், ஊர்காவற்றுறை)

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவரே*
*வானுறையும் தெய்வத்துள் கலந்தவரே*
*நேசம் மிக்க நிர்மலனாய் வாழ்வு தந்தீர்*
*பாசம் மிக்க தந்தையாய் பரிவு தந்தீர்*
*வாசம் மிக்க மலராய் இறைபதமடைந்தீர்*
*ஆண்டுகள் இரண்டு ஆனதையா - உன்*
*அழகு முகங்கண்டு - ஆனாலும்*
*ஆத்மாவில் உறைந்த- உன்*
*நீங்காத நினைவுகளுடன் நாம்..*

நின் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை. (54853)

## 13ஆவது ஆண்டு நிறைவுநாள் நினைவஞ்சலி



திருமதி

### சிவமணி தருமலிங்கம்

மலர்வு 29-08-1950 உதிர்வு 02-11-1993

திதி: ஐப்பசி பூர்வபக்கத் திருதியை
சிராத்த நாள்: 08-11-2006

ஆண்டுகளோர் பதின்மூன்று அகன்றாலும் உம்நினைவால்
அனவரதம் இங்கு அகம்நைந்து கலங்குகின்றோம்
காண்கின்ற இடமெல்லாம் கமல எழில் முகம்கண்டு
கலங்குகின்றோம் எங்கள் கதித்தகுடி உதிப்பதெப்போ!

கரணவாய், கரவெட்டி. (54843)

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர் ஒன்றியம் நடாத்தும் க.பொ.த (சாதாரண) தர மாணவர்களுக்கான கருத்தரங்கிற்குரிய கணிதபாட வினாத்தாள்

நேரம்: 1.00 மணித்தியாலம்


## பகுதி 1

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01) ஒரு பேனாவின் விலை ரூ. 8.50 ஆகும். அத்தகைய 6 பேனாக்களின் விலையாது?

02) கூட்டுக : 1.1 + 0.11

03) தரப்பட்டுள்ள வரிப்படத்தில் $x$ இன் பெறுமானத்தைக் காண்க.





04) காரணி பற்றிய அறிவைக் கொண்டு பெறுமானங் காண்க.
$60.5^2 - 39.5^2$


05) $\sin\theta = 3/5$ எனின் $\tan\theta$ இன் பெறுமானத்தைக் காண்க.

06) 8 மனிதர்கள் மதில் ஒன்றைக் கட்டி முடிப்பதற்கு 6 நாட்கள் எடுக்கும். அம்மதிலை 4 நாட்களில் கட்டி முடிக்க வேண்டுமாயின் எத்தனை மனிதர்கள் வேலைக்கு அமர்த்தப்படல் வேண்டும்?

07 ...ரப்பட்ட வென் வரிப்படத்தில் நிழற்றப்பட்ட பிரதேசத் ...தினை தொடைக் குறியீட்டு வடிவில்எழுதுக.





08) A யிலிருந்து பார்க்கும் போது B யின் திசைகோள் 120° ஆகும். B யிலிருந்து பார்க்கும் போது A யின் திசை கோளை எழுதுக.




09) (2, 5) (5, 11) எனும் இரு புள்ளிகளை இணைக்கும் கோட்டின் படித்திறனைக் காண்க.

10) நிழற்றப்பட்ட பிரதேசத்தைக் குறிக்கும் சமனிலியை எழுதுக.





(1 x 10 = 10 புள்ளிகள்)

11) சுருக்குக : $\frac{5}{2x-1} + \frac{3}{1-2x}$

12) $A = V(R + S)$ என்ற சூத்திரத்தில் S ஐ எழுவாயாக மாற்றுக.

13) கூட்டுக : $1101_{\text{இரண்டு}} + 121_{\text{மூன்று}}$

14) உருவில் காணப்படும் தரவுகளைப் பயன்படுத்தி $x, y$ இன் பெறுமானத்தைக் காண்க.





15) ஒருவர் 8% ஆண்டு எளிய வட்டிக்கு ரூ. 20, 000 ஐக் கடனாகப் பெறுகிறார். 5 ஆண்டுகளின் இறுதியில் கடனிலிருந்து விடுபடுவதற்கு அவர் கொடுக்க வேண்டிய மொத்தப் பணத்தொகையை காண்க.

16) பின்வரும் புள்ளிப் பரம்பலின் ஆகாரம், இடையம் என்பவற்றைக் காண்க.
8, 4, 5, 4, 7, 6, 10

17) $x + 5y = 7$
$3x - y = 5$ எனும் சமன்பாடுகளை தீர்க்காது $(x + y)$ இன் பெறுமானத்தைக் காண்க ?

18) வரிப்படத்தில் காட்டப்பட்ட தரவுகளைக் கொண்டு $x$ இன் பெறுமானத்தைக் காண்க.





19) $\sqrt{2} = 1.41$ எனின் மூலகங்கள் பற்றிய அறிவைக் கொண்டு $\sqrt[6]{8}$ இன் பெறுமானத்தைக் காண்க.

20) $x^2 - 5x + b = 0$ எனும் இருபடிச் சமன்பாட்டின் ஒரு மூலம் 3 எனின் b இன் பெறுமானத்தையும் அடுத்த மூலத்தையும் காண்க.

(2 x 10 = 20 புள்ளிகள்)

21) $2x + y = 3$ எனும் நேர்கோட்டிற்கு சமாந்தரமாகவும் (0, 1) எனும் புள்ளிக்கூடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக.


22) தரப்பட்ட வட்டத்தில் விட்டம் AB = 10 cm $\Delta$ABC யின் பரப்பு $11cm^2$ ஆகவும் இருப்பின் $\Delta$ABC யின சுற்றளவை காண்க.





23) ராஜா ரூபா 8.00 பங்குகளை ரூபா 12.00 வீதம் கொள்வனவு செய்வதற்காக கம்பனி ஒன்றில் ரூ. 6, 000 ஐ முதலீடு செய்தான். கம்பனி 6% பங்குலாபத்தினை வழங்கியது எனின்,
i. வாங்கிய பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.
ii. கிடைக்கும் பங்கு இலாபத்தைக் கணிக்க.

24) ரூ 800 பொருள் ஒன்றானது 10% இலாபம் வைத்து விலை குறிக்கப்பட்டது. பின் விற்பனையின் போது 5% கழிவு கொடுத்து விற்கப்பட்டது.
i. பொருளின் குறித்த விலையைக் காண்க.
ii. பொருளினது விற்பனை விலையைக் கணிக்க.
iii. இவ் விற்பனையின் இலாபச் சதவீதத்தைக் காண்க.

25) i. இணைகரத்தின் சுற்றளவு 20cm எனின் BC யின் நீளத்தைக காண்க.
ii. இணைகரத்தின் பரப்பளவைக் கணிக்க ?
iii. h, இன் பெறுமானத்தைக் கணிக்க ?





26) தரப்பட்ட வரிப்படத்தை உபயோகித்து
i. கோணம் EAB இனது மிகை நிரப்பிக் கோணம் ஒன்றை எழுதுக.




ii. கோணம் DBC இற்கு சமனான கோணம் ஒன்றின் பெயரை எழுதுக.
iii. கோணம் EDB = 140° எனின் கோணம் EAB இன் பெறுமானத்தைக் காண்க.

27) இரசாயன சேர்வை ஒன்றில் cu, Fe, Ni எனும் மூலகங்கள். cu : Fe = 2 : 3, Fe : Ni = 2:1 என்னும் விகிதங்களில் கலக்கப்பட்டுள்ளன.
i. cu, Fe, Ni களிற்கு இடையிலான விகிதத்தை கணிக்க.
ii. 52g சேர்வை ஒன்றில் உள்ள Fe இன் அளவைக் கணிக்க.
iii. புதிய வேறோர் சேர்வை ஒன்றிற்கு 16g cu பயன்படுத்தப்பட்டது எனின் அச் சேர்வையில் பயன்படுத்தப்பட்ட Ni இன் அளவைக் காண்க.

2... 3 யின் நீளத்தைக் கணிக்க.
...ரியத்தின் மொத்த மேற்பரப்பினை கணிக்க.
...ரியத்தின் கனவளவைக் கணிக்க.





29) தேசிய பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்களது விபரத்தை வட்டவரைபு காட்டுகின்றது.
i. பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கட்கு ஒத்த ஆரைச்சிறைக் கோணம் யாது ?
ii. இப்பாடசாலையில் 60 ஆசிரியர்கள் கல்விகற்பிக்கின்றனர் எனின் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் காண்க.
iii. பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கும் தராதரபத்திரமற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான விகிதத்தைக் காண்க ?




30) பக்கம் AB யை X இலும், பக்கம் AC யையும் தொட்டுச் செல்லும் வட்டத்தை அமைக்க.

(3 x 10 = 30 புள்ளிகள்)




# தமிழ் மாணவர் ஒன்றியம் நடாத்தும் க.பொ.த (சாதாரண) தர மாணவர்களுக்கான கருத்தரங்கிற்குரிய கணிதபாட வினாத்தாள்

நேரம்: 3.00 மணித்தியாலம்

## பகுதி II

- முதலாம் வினாவுக்கும் வேறு ஏழு வினாக்களுக்கும் விடை எழுதுக.
- முதலாம் வினாவின் ஒவ்வொரு பகுதிக்கும் 7 புள்ளிகள் வீதம் 42 புள்ளிகளும் மற்றைய வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 14 புள்ளிகளும் வழங்கப்படும்.
- அடியின் ஆரை r ஆகவும் உயரம் h ஆகவும் உள்ள ஒரு திண்மச் செவ்வட்ட உருளையின் வளைபரப்பின் பரப்பளவு $2\pi rhk$ கனவளவு $\pi r^2 rhk$ ஆகும்.
- ஆரை r ஆகவுள்ள ஒரு கோளத்தின் கனவளவு $^4/_3 \pi r^3$ ஆகும்.


(01) a) 1.வீடு ஒன்றின் ஆண்டுப் பெறுமதி ரூ 480,000 ஆகும். குறித்த பிரதேசசபையானது அவ்வீட்டிற்கு 2% ஆண்டு வரியை அறவிடுகிறதெனின்,
அ. வீட்டின் காலண்டு வரியைக் காண்க.
ஆ. இவ்வீடானது ரு. 4000 மாதவாடகைக்கு வழங்கப்பட்டு இருப்பின் வீட்டின் உரிமையாளருக்கு இதனால் ஒரு வருடத்தில் கிடைக்கும் இலாபம் யாது?

2.சுருக்குக.

$$\left[-\frac{64}{125}\right]^{-1/3} \times \left[-\frac{1}{8}\right]^{O}$$

3. மடக்கையைப் பயன்படுத்தாது $x$ இன் பெறுமானத்தைக் காண்க.
$2 \lg 3 + 2 \lg x + ½ \lg 49 = \lg 28$

b) நிழற்றப்பட்ட பகுதியானது தடிப்பான கடதாசி மட்டையினால் ஆன பட்டி ஒன்றினைக் காட்டுகின்றது. இது 14 cm சதுரம் ஒன்றிலிருந்து 7 உஅ ஆரை கொண்ட இரு கால் வட்டங்களை அகற்றுவதன் மூலம் ஆக்கப்பட்டுள்ளது.





1. பட்டியினது சுற்றளவைக் கணிக்க.
2. கால் வட்டம் ஒன்றினது பரப்பளவைக் காண்க.
3. இப்பட்டி ஒன்றை ஆக்கத் தேவைப்படும் கடதாசி மட்டையின் பரப்பளவைக் காண்க ?
4. இப் பட்டியானது 3 mm தடிப்பைக் கொண்டது எனின் இப்பட்டியினது கன வளவைக் காண்க ?

c) 1. காரணிப்படுத்துக : $3x^2 - 14x + 15$

2. தீர்க்க : $2x + 3y = -4$
$x - 3y = 7$

3) இப்பொறியில் ஓர் ஒற்றை எண் ஒன்றை உட்படுத்தும் போது, இறுதியில் கிடைகும் இரு எண்களும், உட்படுத்தும் எண்ணும், செங்கோண முக்கோணி ஒன்றின் பக்கங்களின் நீளங்கட்கு பொருந்தும் முழு எண் பெறுமதிகளாகும். 3 எனும் எண் புகுத்தப்பட்ட போது கிடைக்கப்படுகின்ற எண்கள் காட்டப்பட்டுள்ளது.




1.இதனுள் 5 ஐ உட்படுத்தும் போது கிடைக்கும் இரு எண்களையும் எழுதுக.

2.n என்பது ஒன்றை எண், n ஐ இந்தப் பொறியினுள் உட்புகுத்தின் வெளியேறும் எண்களை ெ சார்பாகக் காண்க.

3. இது செங்கோண முக்கோணி ஒன்றின் பக்கங்களாக அமையும் என்பதை வாய்ப்புப் பார்க்க.

(மிகுதி நாளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



02 - 11 - 2006

வண்.வடமேற்கு,
ஆனைக்கோட்டை யைச் சேர்ந்த
***ராஜ்குமார்-தயானுஷா***
தம்பதியரின்
செல்வப் புதல்வன்
**இறையாளன்**
தனது முதலாவது பிறந்தநாளை
இன்று(02.11.2006) தனது
இல்லத்தில் சிறப்பாகக்
கொண்டாடுகின்றார்.
பிறந்த நாளைக் கொண்டாடும் இவரை சகல இறை ஆசிகளையும் பெற்று தேவ பெலத்து டனும் தூய ஆவியின் வழிநடத்தலிலும் நல மாக வாழ இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

## செல்வன் இறையாளன்

வண்.வட மேற்கு,
ஆனைக்கோட்டை. (54865)

**சுரேஸ்குமார்**
**(பெரியப்பா-கட்டார்).**

### செஞ்சிலுவை தொண்டர்களுக்கு பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், நவ.2

வடமராட்சி நலன்புரி நிலையத்தில் சேவைசெய்யும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்றும் நாளையும் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை மந்திகை ஆதார வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

827 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கன்னி

**03 13 35 51**

**31-10-2006**

செல்லுபடியாகும் தொடர் இல. 4627033 - 4640854

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 301,079 | 10/- | 3,010,790/- |
| 2 இலக்கங்கள் | 27,651 | 20/- | 553,020/- |
| 1 இல. + லக்கினம் | 27,380 | 30/- | 821,400/- |
| 2 இல. + லக்கினம் | 2,525 | 100/- | 252,500/- |
| 3 இலக்கங்கள் | 741 | 500/- | 370,500/- |
| 3 இல. + லக்கினம் | 65 | 5,000/- | 325,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | |
| மொத்தம் | | | 5,733,210/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 359,450 | | 6,756,710/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,672,400/-

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 4632429-2-19 |
| மொனராகலை | 4633248-2-76 |
| கம்பஹா | 4636219-1-30 |
| காலி | 4636887-0-40 |
| களுத்துறை | 4635273-3-80 |


## ஈர விழியுடன் ஈராண்டு அஞ்சலி

*பாசப் பிணைப்பில்*
*20 . 10 . 1955*



*பாதிவழியில்*
*23 . 11 . 2004*

### அமரர் நடேசர் ராஜா

**திதி: 02.11.2006**

*ஈராண்டென்ன இந்த ஜென்மம்*
*மறையும் வரை நாம் மறப்போமா?*

740, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (54860)

- குடும்பத்தினர்.

## சேவை

**55,000 அமெரிக்கா விசா லொத்தர் விண்ணப்பப்படிவம் பெற, நவம்பர் 5ஆம் திகதி (ஞாயிறு) உதயனைப் பார்க்கவும்**

Penguin Book Shop, Tel:- 071 6806843
B2/F23 Bloemendhal Flats. 011 2438367
Colombo - 13.

## தவறிவிட்டது

நடேசு நகுலேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (740805274V) திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் காளிகோயிலடி, தாவடி தெற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள் அலகு - பொருட் தம்பசிட்டி

எதிர்வரும் 04.11.2006 இல் சகல விரிவுரைகளும் ஆரம்பமாகவுள்ளது என்பதை சகல மாணவர்களுக்கும் அறியத் தருகிறோம்.

நிர்வாகம்.

## நன்றி நவில்கின்றோம்

விசேட பரீட்சையை ஒழுங்கு செய்த அதிபர் அவர்களுக்கும் கல்லூரி சமூகத்தவர்களுக்கும், மாணவர்களுக்கு மதிய உணவை வழங்கிய சேவாலங்கா நிறுவனத்திற்கும், போக்குவரத்து வசதியை ஒழுங்கு செய்து தந்த போக்குவரத்துச் சபைக்கும், பரீட்சை நாள்களில் அவற்றை சிறந்த முறையில் ஒழுங்கமைத்த சென்ஜோன்ஸ் அம்புலனஸ் தொண்டர்களுக்கும், சிக்கன கடன் உதவி கூட்டுறவுச் சங்கத்திற்கும், ஊழியர் சங்கத்திற்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(54867) **தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள்.**

# மரண அறிவித்தல்கள்

## அருட்சகோதரி பிரான்சிஸ்கா மேரி

**(F.M.M சபையைச் சேர்ந்தவர்)**

குளமங்கால், மல்லாகத்தைச் சேர்ந்த அருட்சகோதரி பிரான்சிஸ்கா மேரி 31.10.2006 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மைக்கல்-இசபேல் தம்பதியரின் கனிஷ்டபுத்திரியும் காலஞ்சென்ற வண.மைக்கல் சவிரிமுத்து (OMI) அவர்களின் சகோதரியும், வண.பிரான்சிஸ் யோசேப்பின் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (01.11.2006) புதன்கிழமை பிலியந்தலையிலுள்ள அவரது மடத்தில் திருப்பலியின்பின் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாழ்ப்பாணம். (54878)

தகவல்:
பெறாமக்கள்.

## திருச்செல்வம் சுரேந்திரன்



12/5கென்னடி வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம்- சுரேந்திரன் நேற்று (01-11-2006) புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் திருச்செல்வம்-மாகிறேர் தம்பதியரின் அன்பு மகனும் யேயக்கவுறியின் அன்புக் கணவரும், சுவிற்றி, சியான், ஆகியோரின் தந்தையும் சுகுணா, நியூட்டன், டிலான், றெஜி, சுகிர்தா, சுஜி, யெராட் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (02-11-2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12/15, கென்னடி வீதி,
நாவாந்துறை ,
யாழ்ப்பாணம். (54863)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பாலபாஸ்கரன் அருட்செல்வி

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் தற்பொழுது இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலபாஸ்கரன் அருட்செல்வி 29.10.2006அன்று காலமானார்.

அன்னார் அமரர் சண்முகசுந்தரம் - ஞானசக்தி (ஆஸ்திரேலியா), தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் அமரர்களான இராசரத்தினம்-சிவகாமசுந்தரி தம்பதியரின் மருமகளும் பாலபாஸ்கரனின்(வைத்தியர், இந்தியா) அன்பு மனைவியும் கீர்த்தனா, கம்சனா ஆகியோரின் பாசமிகு தாயும் அருள்முருகனார் (ஆஸ்திரேலியா), சிவதம்பு(ஆஸ்திரேலியா), அருள்நங்கை (ஆஸ்திரேலியா), கதிர்காமசேகரன் (வைத்தியர், லண்டன்), ஆகியோரின் சகோதரியும், பாலச்சந்திரன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்), சத்யவதனி (ஆஸ்திரேலியா), ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் இந்தியாவில் இன்று (2-11-2006) வியாழக்கிழமை தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (54866)

தகவல்:
இ.பாலச்சந்திரன்
(மைத்துனர்)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகரத்தினம் திலகவதி

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இளவாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் திலகவதி 31.10.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகரத்தினத்தின் பாசமிகு மனைவியும் கலாநாயகி, அமரர் தேவிகா, பவளசீலன்(தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்), வரதலட்சுமணன் (தஞ்சன்), கலாரஞ்சினி (யாழ்.மாவட்ட சி.க. உ. சாமசம்) ஆகியோரின் அன்புத் தாயும் சோதிலிங்கம், பத்மாவதி, அருள்ஞானசோதி, விஜேந்திரன் (விஜி, கிளிநொச்சி வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் பிரமாவாணி, சர்மிகன், சுகஞ்ஜன், பிரவீனா, சசீதரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.11.2006) புதன்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா.பவளசீலன் (மகன்).

இளவாலை வடக்கு,
இளவாலை. (54875)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செளந்தரநாயகி சுப்பிரமணியம்



பன்னாலை, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செளந்தரநாயகி சுப்பிரமணியம் (சின்னத்தங்கச்சி) 31.10.2006 செவ்வாய்க்கிழமை டென்மார்க் கேர்ணிங் நகரில் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற மானார் சங்கரப்பிள்ளை-சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற நாகமுத்துகந்தையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவபாலசுப்பிரமணியம், வரதராஜப்பெருமாள், பூரணலிங்கம், சோதிமலர்,பத்மநாதன் ஆகியோரின் சகோதரியும், சந்திரலேகா, தங்கம், யோகம், விநாயகமூர்த்தி, யோகரஞ்சனி, காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், ராசம்மா, பொன்னுத்துரை (பொலிசர்), சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், கௌரிதேவி, கண்ணன், உதயசங்கர், சிவதேவி, சிவசங்கர் ஆகியோரின் அன்புத் தாயும், விஜயகுமாரன், வாமதேவி, சிவனருள்செல்வன் ஆகியோரின் அன்புமாமியும், கபிலன், அனுலன், மிதுனா, மிதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற நடராஜா, அருமைச்செல்வநாயகி, காலஞ்சென்ற வீரவாகு, சிதம்பரம், செல்வராஜா,சிவஞானமலர் ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.11.2006 ஞாயிற்றுக்கிழமை டென்மார்க்கில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பழை. (54870)

தகவல்:
ச.பூரணலிங்கம்.

## திருமதி பாக்கியம் சின்னத்துரை



வண்ணார்பண்ணை, நீராவியடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சின்னத்துரை நேற்று (01.11.2006) புதன்கிழமை காலை 7.30 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இ.சின்னத்துரையின் (சட்டத்தரணி) அன்பு மனைவியும் வரதலஷ்மி (அமரர்), கமலாம்பிகை (அமரர்), காராளசிங்கம் (கனடா), சோதிமலர் (அமரர்), இராமலிங்கம், இந்திராணி (ஜேர்மனி), பத்மாவதி (அமரர்), கேசவலிங்கம், தர்மராஜ்லிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், இராமசேகரம் (அமரர்) சுப்பிரமணியம் (அமரர்), ராஜேஸ்வரி (கனடா), வாமதேவன் (அமரர்), பரமேஸ்வரி (அமரர்), ஸ்ரீதாஸ் (அமரர்), சத்தியபாமா (அமரர்), இரத்தினம்மா (பபி), தேவகி (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 111/4, நடராஜா வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து இன்று வியாழக்கிழமை (02.11.2006) மு.ப.11 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

111/4, நடராஜா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (54862)

தகவல்:
சி.கேசவலிங்கம் (மகன்).
மலாயன் கபே, யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. மனித உரிமை கண்காணிப்பு தூதரகத்தை இலங்கையில் நிறுவக் கோருகிறது உலக அமைப்பு

புதுடில்லி,நவ.2

பரந்துபட்ட அளவில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைப்பதற்கு இலங்கையில் மனித உரிமைகள் கண்காணிப்புத் தூதரகம் ஒன்றை நிறுவுவதற்கு ஐ.நா. முன்வர வேண்டுமென்று மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வரும் 'ஹியுமன் றைட்ஸ் வாச்' என்ற 'உலக மனித உரிமைகள் கண்காணிப்பகம்' கோரியிருக்கிறது.

மனித உரிமைகள் சட்டத்தை இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் பரந்து பட்ட அளவில் மீறி வருவதாக இந்தக் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் குற்றஞ் சாட்டியுள்ளது.

மோதல் நடைபெறும் பகுதிகளில், இராணுவ சூனியப் பிரதேசங்களை சரணாலயங்களாக்குவதற்கு இராணுவமும், விடுதலைப் புலிகளும் இணங்க வேண்டுமென்றும் கண்காணிப்பகம் கேட்டுள்ளது.

'இலங்கையில் குடி மக்களின் பாதுகாப்பை முன்னேற்றுதல்' என்ற தலைப்பின் கீழ் 'ஹியுமன் றைட்ஸ் வாச்' தயாரித்துள்ள அறிக்கையில், மோதல் காரணமாக புலம்பெயர்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மனிதாபிமான நிவாரண உதவிகள் கிடைப்பதை அரசோ, விடுதலைப் புலிகளோ யாரும் உறுதிப்படுத்துவது கிடையாது என்று கண்டித்திருக்கிறது.

சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைய, சிரேஷ்ட படை அதிகாரிகளும், கட்டளைத் தளபதிகளும் இதர தரத்திலுள்ள படையினரும் நடப்பதையும் அந்தச் சட்டப் பிரமாணங்களை நன்குணர்ந்து கடைப்பிடிக்க முன்வருவதையும் உறுதிப்படுத்துவதோடு, அபாயச் சூழல் நிலவும் இலங்கையில் வாழும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதற்கான வழிவகைகளை முன்னேற்றி மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடும் தொண்டர்கள் அப்பகுதிகளுக்குச் சென்று வருவதற்கு அரசால் விதிக்கப்படும் தேவையற்ற கட்டுப்பாடுகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்றும் இந்தக் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவன ஊழியர்களுக்கு எதிரான வன்முறைகள், மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், தொல்லைகள் என்பனவற்றுக்கும் முடிவு கட்டப்பட வேண்டும் என்றும் கண்காணிப்பகம் கோரியுள்ளது. இன மோதல்கள் தலைதூக்குவதைத் தணிக்க, அனைத்து இன அமைப்புகள் மூலம் ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

## பரீட்சை நிலையம் இடம்மாற்றப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், நவ.2

நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மிருசுவில் றோ.த.க. வித்தியாலய மாணவர்களுக்கான பரீட்சை நிலையம் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்று பாட சாலைஅதிபர் எவ்.எக்ஸ் அன்ரன் தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் அனைவரையும் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்குப் பரீட்சை மண்டபத்திற்கு வருகைதருமாறு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை - இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனில் தற்போது பாடசாலைஇயங்கிவரும் சாவகச்சேரி விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் அதிபருடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

## சட்டவாரத்தை முன்னிட்டு அகவொளியில் கருத்தரங்கு

நல்லூர், நவ.2

தேசிய சட்டவாரத்தை முன்னிட்டு, தேவைநாடும் மகளிர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். அகவொளி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் இந்த கருத்தரங்கு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் தி.சுவேந்திரராஜா கௌரவ விருந்தினராகவும், ஜனாதிபதி சட்டத்தரணியும், யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவியுமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், செஞ்சொற்செல்வர் ஆறுதிரு முருகன், அருட்திரு ஜே.ஜே.பேர்ணாட் அடிகளார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாவும் பங்குபற்றுவர்.

யாழ். பல்கலைக்கழக சட்டபீட பதில் தலைவர் ரி.சுதர்சன், மனித உரிமை ஆணைக் குழுவின் சட்ட ஆலோசகர் மு.றெமீடியஸ் ஆகியோர் இந்தக்கருத்தரங்கில் கருத்துரை வழங்குவர்.

## ஜி. சீ. ஈ. பரீட்சை மாணவருக்கு கல்விப் போதனை வழங்கி உதவுக

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.2

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு கல்விப் போதனைசார் உதவிகளை வழங்க சமூகமட்டத் தலைவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் முன்வரவேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

இது தொடர்பாக, மாணவர் ஒன்றியம் விடுத்த செய்திக்குறிப்பில்-

தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக குடாநாட்டு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளன. அதிலும், குறிப்பாக தேசியப் பரீட்சையான ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களின் நிலைமை மிக பரிதாபகரமானதாகவுள்ளது. இந்தப் பரீட்சையைச் சிறப்பாக எழுத முடியாத மாணவர்களின் எதிர்காலம் என்பது மிகவும் கடினமாகவே இருக்கும் என்பதைச் சகலரும் அறிவர்.

தமது உயர்கல்வியைத் தொடர்வதற்கு இந்தப் பரீட்சையில் குறித்த பெறுபேறுகளை அடையவேண்டிய அவசிய தேவை அவர்களுக்குள்ளது. இந்நிலையில், போதிய போக்குவரத்து வசதியின்மை, மின்சார விநியோகம் இன்மை என்பவற்றோடு போர் நெருக்கடி காரணமாகப் பல பாடசாலைகளை முழுமையாகச் செயற்படுத்தமுடியாத நிலையும் காணப்படுகின்றது.

தனியார் கல்வி நிலையங்களை நம்பியுள்ள மாணவர்களும் பல சூழ்நிலை - நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பொருளாதார நெருக்கடி காரணமாகவும், தமது கல்வியைக் கைவிடும் நிலையும் தோன்றியுள்ளது. இந்தநிலை வேதனையளிப்பதுடன், எமது சமூகத்துக்கு பெரும் பின்னடைவையும் ஏற்படுத்தும். இதனை சமூகத்திலுள்ள அனைவரும் கவனத்திற் கொண்டு தம்மால் இயன்ற பங்களிப்பை மாணவர்களின் கல்வி நலனில் செலுத்துமாறு கேட்டுநிற்கின்றோம்.

காலத்தின் அவசியத்தை உணர்ந்து குறிப்பாக, போர் நெருக்கடி மிக்க கிராமிய மாணவர்களுக்கு இந்த கல்வித் தேவையை நிறைவு செய்து உதவும் வண்ணம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அன்புக் கட்டளை பிறப்பிக்கின்றோம். பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களும் எதுவித தயக்கமும் இன்றி பல்கலைக்கழக மாணவர்களுடன் தொடர்பு கொண்டு தமது கல்வித்தேவையை நிறைவு செய்து கொள்ளும்படியும் கேட்டுள்கொள்கின்றோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## வரவு-செலவுத் திட்டத்தை ஐ.தே.கட்சி ஆதரிக்குமாம்

### நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் அறிவிப்பு

கொழும்பு, நவ. 02

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசின் 2007ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கும். அதே சமயம் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்வதை எதிர்த்து குரல் கொடுக்கவும் தயங்காது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுப்பகல் கொழும்பிலுள்ள எதிர்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பந்துல குணவர்த்தன எம்.பி. தெரிவித்ததாவது:-

அரசினால், கொண்டுவரப்படும் 2007ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு திட்டத்திற்கு எதிர்கட்சியான ஐ.தே.க. ஆதரவு வழங்கவுள்ளது.

தற்போது நாடு உள்ள நிலைமையில் இத்திட்டத்தை எதிர்த்து நின்று நாடாளுமன்றத்தைக் குழப்புவது முறையல்ல. எனினும் அத்தியாவசிய பொருள்களுக்கான விலை அதிகரிப்பு, வட்டிவீதம் அதிகரிப்பு என்பவற்றை எதிர்த்து நாம் குரல் கொடுப்போம். மக்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து நாம் ஊமைகள் போன்று மௌனமாக இருக்க மாட்டோம். அரசு கடந்தமுறை சமர்ப்பித்த வரவு - செலவுத்திட்டத்தின்மூலம் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்புக்கு ஜே.வி.பியேபொறுப்பு:-இவ்வாறு பந்துல குணவர்தன தெரிவித்தார்.

(ஐ)

## சீராகவும் சமமாகவும் பொருள்கள் சகலருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்க

### பாஷையூர் அந்தோனியார் கூட்டுறவுச் சங்கம் விடுத்துள்ள கோரிக்கை

தற்போது யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கக் கிளைகளூடாக வழங்கப்பட்டுவரும் உணவுப் பொருள்கள் யாவும் சீரான முறையில் சகல மக்களுக்கும் சமமாகக் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ். ப.நோ.கூ. சங்க முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இதுதொடர்பாக கடற்றொழிலாளர் சங்கம் முகாமையாளருக்கு கையளித்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மக்கள் நெரிசல் கட்டுக்கடங்காமல் நீண்ட வரிசைகளில் நாள் கணக்காக உணவுப் பொருள்களுக்காகக் காத்துக்கிடக்கின்றனர். அறிவிக்கப்பட்ட பொருள்கள் முன்னுக்கு நிற்கின்ற சிலருக்கு மட்டுமே கிடைப்பதும் பின்னே நிற்கின்ற பலருக்கு கிடைக்காமல் போவதும் தொடர்கதையாகத் தொடர்ந்த வண்ணம் உள்ளது. தொடர்ந்து பாதிப்படைந்தவர்கள் உணர்ச்சி வசப்பட்டு வன்முறைகளைக் கையாளவும் தூண்டப்படுகின்றார்கள்.

தற்போது விநியோகிக்கப்பட்டுவரும் பல்பொருள் விநியோகத்தில் கிளை இல 23இல் முதலில் நின்ற 60 அட்டைகளுக்கு மட்டும் எல்லாப் பொருள்களும் கொடுக்கப்பட்டன. தொடர்ந்து எல்லாம் குறைக்கப்பட்டு 230ஆவது அட்டைக்கு 125.85 சதம் பெறுமதியான 5 வகையான பொருள்கள் மட்டுமே கிடைத்தது. கிடைக்காத பொருள்கள் அடுத்தடுத்த நாள்களில் கிடைக்குமா? இல்லையா என்பது புரியாதுள்ளது - என்று அதில் உள்ளது.

**புளியமரம் விற்பனைக்கு**

*விழுந்த நிலையிலுள்ள பெரியபுளியமரம் ஒன்று விற்பனைக்கு உண்டு.*

தொடர்பு: பரிபாலன சபை
தனிப்பனை வீரபத்திர சுவாமி கோயில்,
பழைய வீதி, கோப்பாய் தெற்கு. (ஆலய வீதியிலுள்ள கண்ணன் கடையில் 04.11.2006 சனிக்கிழமைக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்)

**மரண அறிவித்தல்**

## மரியாம்பிள்ளை வெலிச்சோர் ஆபரணம்

*[ஓய்வுபெற்ற தொழில் திணைக்கள உத்தியோகத்தர்]*



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மரியாம்பிள்ளை வெலிச்சோர் ஆபரணம் நேற்றுமுன்தினம் (31.10.2006) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை - கத்தர் தம்பதியரின் அன்பு மகனும் மொனிக்கா அஞ்சலினாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை அருளானந்தம், சூசைப்பிள்ளை மாக்கிறேற் ஜோர்ஜ் ஞானமலர், ஞானப்பிரகாசம் மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் லெற்றிசியா ராணி (பிரான்ஸ்), அருட்திரு ஜெறோம் **O.M.I** (றோம்), வின்ஸ்லோ (**NIIT** மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்றூஞானேஸ்வரனின் அன்பு மாமனும் அன்னைஸ் மேரி, புளோரன்ஸ்மேரி, செலின் மேரி ஆகியோரின் அன்புப் பேரனும் அருட்திரு ஞா.அற்புதராஜா **O.M.I**(றோம்), அருட்திரு. சூ.அல்றின் **O.M.I** (டென்மார்க்) அருட்சகோதரன் எ.சேவியர் ஆகியோரின் அன்பு மாமனும் அருட்சகோதரன் அ.கஸ்ரனின் பெரியதந்தையும் அருட்சகோதரன் பா.கிறிஸ்ரியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிச்சடங்குகளுக்காக இன்று (02.11.2006) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலியின்பின் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வண. பிதா யஸ்தஸ் சின்னப்பு வீதி,*
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*

தகவல்:
குடும்பத்தினர்

**மரண அறிவித்தல்**

## வைத்திலிங்கம் வாமதேவன்



சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், யாழ். சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் வாமதேவன் (இளைப்பாறிய உடற்பயிற்சி ஆசிரியரும், ஆங்கில ஆசிரியரும்) நேற்று (01.11.2006) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி வைத்திலிங்கத்தின் கனிஷ்ட மகனும் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் காமாட்சி யோகீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மதியமுதன், மதுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜேசன் - செல்வ ராஜாவின் (போதகர், அசெம்பிளி ஒப் கோட், சாவகச்சேரி) மாமனும் ஜோன் பிரியந்த், ஜொஆனா, ஜேன், ஜொனத்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2006) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(54873)

20, பேரின்பநாயகம் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
[illegible]

தகவல்:
போதகர் ஜேசன் செல்வராஜா (மருமகன்).

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

*செல்வராஜ் தினேஸ்குமார் அவர்களின்*

**சைகைமொழி இறுவெட்டு வெளியீடு**

இடம் : யாழ்ப்பாணம் தே.க.க. பிரதான மண்டபம்
காலம் : 03.11.2006 மு.ப. 8.30 மணி
தலைவர் : S.K.யோகநாதன் அவர்கள்
(பீடாதிபதி, யா.தே.க.க.)
பிரதம விருந்தினர்: சி.சுந்தரேஸ்வரன்
(HNB முகாமையாளர், சுன்னாகம்)

மேற்படி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஆர்வமுள்ளோரை அன்புடன் அழைக்கின்றோம்.

விசேட கல்வி மன்றம்
யாழ்.தே.க.க.

(54857)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நேற்று இடம் பெற்ற கட்டடத் திறப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பெயர்ப்பலகை, பிரதான கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்படுவதை முதலிரு படங்களிலும் கட்டடத் தொகுதியின் கம்பீரமான தோற்றத்தை இறுதியாக உள்ள படத்திலும் காணலாம்.

# யாழ்.நகருக்கு நேற்றிரவு ஒருமணி நேரம் மட்டுமே மின்சாரம்

யாழ்ப்பாணம், நவ.02

யாழ்.ஆஸ்பத்திரி உட்பட யாழ்.நகரப் பகுதிக்கும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் நேற்றிரவு ஒரு மணிநேரம் மட்டுமே மின்சாரம் கிடைத்தது.

மாலை 6 மணிக்கு வழங்கப்பட்ட மின்சார விநியோகம் இரவு 7 மணியளவில் திடீரென நிறுத்தப்பட்டுவிட்டது. மாலை 6மணிமுதல் இரவு 10 மணிவரை மின்சாரம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த மக்கள் திடீரென மின்சாரம் நிறுத்தப்பட்டதை அடுத்து அதற்கான காரணத்தை அறிந்து கொள்ள முயற்சித்தனர் எனத் தெரியவந்தது.

இதற்கிடையில் திடீரென மின்சாரம் நிறுத்தப்பட்டது குறித்து யாழ்.மின்சார சபை வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது :-

சுன்னாகத்திலிருந்து யாழ்.நகருக்கு மின்சாரம் வழங்கும் மார்க்கத்தில் - உரும்பிராய் பகுதியில் ஏற்பட்ட பழுது காரணமாக மின்சார விநியோகம் இடைநிறுத்தப்பட்டது என்றும் -

இன்று காலை அது சீர்செய்யப்பட்டதைத் தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழத் தேசியக் கொடியேற்றல் என்பவற்றைத் தொடர்ந்து பிரதான கட்டடத் தொகுதியை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் திறந்து வைத்தார்.

தொடர்ந்து ஏனைய சிகிச்சைப் பிரிவுகளை நாடாளுமன்ற உறுப்பினர்களான க.கனகரட்ணம், செ.கஜேந்திரன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன், தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஓவியன் மற்றும் பலர் திறந்துவைத்தனர்.

திறப்புவிழாவில் டாக்டர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வேயின் கொழும்புத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் புலிகளின் குழுவினரோடு கிளிநொச்சி வரை ஹெலியில் உடன் வந்தார்.

தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் கிளிநொச்சி மைதானத்தில் புலிகளின் குழுவினரை வரவேற்றனர்.

## ஆள்கடத்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில்கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் கடத்தப்பட்டு காணாமற்போனோரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ஐ)

## உடனடியாக ஏ-9 பாதையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் - பேக்கரிகள் - இராணுவத்தினரின் கடைகள் என்பவற்றின் முன்பாக எல்லாம் மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றார்கள்.

மிகவும் தட்டுப்பாடான பொருள்களான பால்மா, நெருப்புப்பெட்டி, உள்ளி போன்ற பொருள்களைப் பெற மக்கள் தனியார் கடைகள் முன் காவல் நிற்கிறார்கள்.

பெற்றோல் நிலையங்கள் முன்னால் பெற்றோலுக்கும், மண்எண்ணெய்க்கும் மக்கள் காவல் நிற்கிறார்கள்.

குழந்தைகளுக்கான உணவுப் பொருள்கள், பால்மாவகைகள், பிஸ்கற் போன்ற பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனத்தினர் கள்ளச் சந்தையில் விற்கப்படும் பொருள்களின் விலைகளை ஊடகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளனர். இதன்படி அரிசி ஒரு கிலோ 120ரூபாவாகவும், கோதுமை மா 150ரூபாவாகவும், சீனி 450ரூபாவாகவும் தேங்காய் 80ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

இந்த நிலைக்கு யாரைக் குற்றஞ்சாட்டுவது?

★முதன்மையாக ஏ-9 பாதையைத் திறக்க மறுக்கும் அரசாங்கத்தை அல்லது அதற்கு மாற்றாக வேறு தரைவழி பாதையை அமைக்காத அரசாங்கத்தையா?

★யாழ். குடாநாட்டு மக்களுக்கு எரிபொருளையும், உணவுப் பொருள்களையும் கப்பலால் போதிய அளவு கொண்டு வந்து திருப்திப்படுத்த முடியும் என்று தவறான கருத்தைத் தொடர்ந்து அரசிற்கு வழங்கிக் கொண்டிருக்கும் இலங்கை இராணுவத்தையும் யாழ்ப்பாண அரச செயலகத்தையுமா? மக்களின் இந்த இக்கட்டான நிலையில் அவர்களைக் கைவிட்டுள்ள தனியார் வர்த்தகர்களையா?

★மக்களின் அத்தியாவசிய உணவுத் தேவை பற்றி பாராமுகமாகவும், ஏனோ, தானோ என்ற போக்குடனும் இருக்கும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களையா?

ஏ-9 பாதையை அல்லது அதற்கு மாற்றீட்டான பாதையை திறக்க வழிசெய்யுங்கள். யாழ்.குடாநாட்டு மக்கள் தாம் திறந்த சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறோம் என்ற மனநிலையைப் பெறாதிருக்க வழிசெய்யுங்கள்- என்று அதில் உள்ளது.

# கப்பல் பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம். நவ.2

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்ல விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினர் கப்பல் பயணத்திற்கென நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்றுக் காலையிலிருந்தே கப்பல் பயணிகள் சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் திரண்டு நின்றதைக் காண முடிந்தது.

கடந்த மாதம் 11 ஆம் திகதிக்குப் பின்னர் கப்பல் பயணிகள் நேற்றே அழைத்துச் செல்லப்பட்டனர்.

## ஆயுததாரிகள் வீடு புகுந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என்று - கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது வீட்டில் இருந்த பாஸ்கரன் கமலவதி (வயது 52) என்ற குடும்பப் பெண் மார்புப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

அத்துடன், அவருடன் வீட்டிலிருந்த அவரது மகனை விசாரணைக்கெனத் தம்முடன் அழைத்துச் சென்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த நிலையில், தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குடும்பப்பெண், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

முன்னிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து இணுவில் பகுதியில் நேற்றிரவு முழுவதும் பதற்றம் நிலவியது. (78)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெற்ற ஜெனிவாப் பேச்சுகளுக்குப் பின்னர் விமானப்படையினர் நடத்திய முதலாவது குண்டுவீச்சுத் தாக்குதல் இது வென வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை -

மட்டக்களப்பு - கதிரவெளிப் பகுதியில் இனங்காணப்பட்ட புலிகளின் இலக்குகள் மீது நேற்றுக் காலை விமானப்படையினர் குண்டுத் தாக்குதல் நடத்தியதாக தேசிய பாதுகாப்புத் தகவல் நிலையம் தெரிவித்தது.

## இணைத்தலைமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளின் பிரதிநிதிகள், தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை சந்தித்துப் பேச்சுநடத்தியதாக தகவல் ஒன்று தெரிவித்தது.

இந்தப் பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து எதுவும் வெளியாகவில்லை.

## ஜெனிவாப் பேச்சின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டாது முடிவடைந்திருப்பது இலங்கைத் தீவில் முழு அளவிலான போர் வெடிக்கும் ஆபத்தை உருவாக்கி இருப்பதாக இந்தியா அஞ்சுகிறது. ஏற்கனவே யாழ். குடாநாட்டில் உருவாகி இருக்கும் மனிதாபிமான நெருக்கடி இதனால் மேலும் மோசமடைந்து விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் புதுடில்லி கவலை கொண்டுள்ளது.

நோர்வேயின் அனுசரணைப் பணிக்கும் இணைத்தலைமை நாடுகளின் நிலைப்பாட்டுக்கும் ஆதரவு தெரிவித்துவரும் இந்தியா, இலங்கை சமாதான முயற்சிகளில் வெளியில் இருந்து கொண்டே இருதரப்புகளுக்கும் அழுத்தம் தரும் அயல் சக்தியாக விளங்குகிறது.

ஏ-9 நெடுஞ்சாலை விவகாரம் உட்பட பேச்சு முன்நகர முடியாமற் போனமைக்கான காரணங்களை இந்திய அதிகார மட்டம் கவனத்தில் எடுத்திருக்கிறது.

மீண்டும் இரண்டு தரப்புகளையும் பேச்சு மேசைக்கு கொண்டுவருவதற்கான இணக்கத்தை இனி ஏற்படுத்துவது நோர்வேத்தரப்புக்கு மேலும் கடினமான பணியாக இருக்கும். இதில் புதுடில்லியின் பங்களிப்பின் அவசியத்தை நோர்வே உணர்ந்துள்ளது.

ஜெனிவா பேச்சுக்களின் முடிவு குறித்து புதுடில்லியின் பிரதிபலிப்புகள் இன்னும் வெளியாகவில்லை. விடுதலைப் புலிகளுடன் பேச்சில் இணக்கப்பாடு எட்டப்படாதது குறித்து கொழும்பு அரசு புதுடில்லிக்கு விளக்கம் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதுடில்லியும் அதற்காகவே காத்திருக்கிறது. இந்தக்கட்டத்தில் வெளியுறவுச் செயலரின் கொழும்பு விஜயம் பொருத்தமற்றது என்று இந்திய அரசு கருதுகின்றது.

- இவ்வாறு அந்த ராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

(ஐ)

யாழ். நாவலர் இன்ஸ்ரிரியூட்டின் கிளை நிறுவனம் - திருநெல்வேலியில்
"நாவலர் இன்ஸ்ரிரியூட்"
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.
யாழ். மாவட்டத்தில் புகழ் பூத்த முன்னணி ஆசிரியர்கள் பலரின் கற்பித்தலில்...
O/L வகுப்புகளுக்கான துரித மீட்டல் வினாவிடை வகுப்புகள்
ஆரம்பம்: 03.11.2006 (வெள்ளி) பிற்பகல் 3.30 மணி
A/ L 2007, 2008, DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

CHEMISTRY DAY CLASS
By: RANJAN
* கடந்த கால வினாவிடை.
* சுருக்க குறிப்புகள் வழங்கப்படும்.
*மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனம்.
ஐடியல் அக்கடமி, 67/5, நீராவியடி, யாழ்ப்பாணம். ஆரம்பம்: 04.11.2006 (மு.ப 8)
ஸ்கந்தா கல்வி நிலையம், மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை. ஆரம்பம்: 03.11.2006 (பி.ப 1)
★A/L 2007, 2008 வகுப்புகளும் நடபெறுகின்றன.
★நேர அட்டவணை அலுவலகத்தில்

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
புதிய பிரிவு
03.11.2006 8 மணி
Eco.: திரு. கஜீதரன்
Acc.: திரு. பகீரதன்
B.st.: திரு. முரளி
Tam.: திரு. குழந்தை
Log.: திரு. கமல்
H.c.: திரு. தரன்
Geo.: திரு. பாபு
Chr.: திரு. வசந்தன்
Ram.: திரு. ரமேஸ்
Hist.: திரு. பத்மன்
சனி, ஞாயிறு 2007, 2008 வழமையான நேர அட்டவணையில் யாழ். நகில்
DAY CLASS
சிறப்பாக நடைபெறும் ஒரே நிறுவனம்

கணக்கீடு
பாலகஜன்
A/L 2007 / 2008 & DAY
PAPER CLASS
Mon/ fri - 3.15 p.m
ஆரம்பம்: 03.11.2006 (fri)
BEACON - யாழ்.
(வெலிங்டன் சந்தி அருகில்)

இன்று விவாப்பத்திரம்
தரம்: 5 இறுதி வெற்றித் தேர்வு
கணேசலிங்கம் அவர்களின்
இன்றே புத்தகசாலைகளில்
பூபாலசிங்கம் - யாழ். நகர்.
துர்க்கா - சுன்னாகம்.
மொடேன் - நெல்லியடி.
அருள் - சாவகச்சேரி.

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி யாழ்.நகர்.
A/L 2008 கணக்கீடு தொங்கல் கணக்கு
SAT/SUN - 2.00-3.30 pm
A/L 2007 DAY கம்பனி SAT/SUN 3.30-5.00 pm
By: M.சசிரூபன்
ஆரம்பம்:- 04.11.2006 SAT

விமான சேவை
யாழ். - கொழும்பு
விமான சேவைகள்
தனியார் நிறுவனத்தின்
நான்கு பேர்
பயணிக்கத்தக்க
சிறு விமான சேவை
உத்தரவாதத்துடன்
நடைபெறுகின்றது.
மேலதிக விவரங்களுக்கு
தொடர்பு:
0785788811,
0114964994,
FAX: 0112721789

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org